1979 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வியாக இருந்தாலும் சுருக்கமாகப் பதில் சொல்வது நல்லது. இது போன்ற பட்டியல் இருந்தால், அச்சடித்துக் கொடுக்கலாம். தொல்லை இருக்காது,

சென்னை மருத்துவக் கல்லூரி

*வினா எண் 598—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மருத்துவக் கல்லூரியை பட்ட மேற்படிப்புக் கல்வி ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இத் திட்டம் 1979–80-ம் ஆண்டில் செயற்படுத்தப்படுவதற்கான செயற் குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

மருந்தாளுநர்களது பணிகள்

*வினா எண் 599—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரிய மருத்துவமனைகளில் பணியாற்றும் பார் மஸிஸ்டுகளுக்கு எழுத்து வேலை போன்ற பிற வேலைகள் கொடுப்பதை நிறுத்திடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன: (அ) & (ஆ) இப்பிரச்சினை குறித்து மருத்துவக் கல்வி இயக்குநர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை துணை இயக்குநர் வேறு சில மருத்துவத் துறை அதிகாரிகள், தமிழ்நாடு மருந்தாளுநர் சங்கத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோர் அடங்கிய கூட்டத்தில் விவாதிக்கப் பட்டு நடைமுறைக்குகந்த ஒரு வேலைத் திட்டம் வரையப்பட்டு அது மருந்தாளுநர் சங்க நிர்வாகிகளாலும் ஏற்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS